அனுப்புநர்

திருமதி. சு. நாகரத்தினம்,
மாண்புமிகு மேயர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு–638 001

**ந.க.எண். சி**3/2022 **நாள்**- 13.02.2026

அய்யா/அம்மையீர்,

பொருள்- ஈரோடு மாமன்றம் – 13-02-.2026-ஆம் தேதி மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற பிப்ரவரி-2026-ஆம் மாதத்திற்கான அவசரக் கூட்ட நடவடிக்கைகள் அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

பார்வை- 13/02/2026 ஆம் தேதிய அவசரக் கூட்ட பொருள்கள்

/////

ஈரோடு மாமன்றத்தின் 13.02.2026 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்ற மாமன்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகள் இத்துடன் தங்களுக்கு இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சு.நாகரத்தினம்
**மேயர்**, 13/2/2026

**ஈரோடு மாநகராட்சி,**

**இணைப்பு- கூட்ட நடவடிக்கைகள்**

13/2/26

# கூட்டநடவடிக்கைகள்

(தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-இன் விதி எண்.156 (3))

**01.)** ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு வடக்கு உள்வட்டம், சூரியம்பாளையம் கிராமம், மண்டலம்-1, ரீ.ச.எண்.169-ல், பெருமாள் மலை மொத்தப்பரப்பு 33.41.5-ல் புல எண்.169/2, 169/4, 169/5 மற்றும் 169/6 காலைகளை நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டது. இப்புலங்களில் கடந்த 30 வருடங்களாக வசித்து வரும் 50 நபர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பட்டா வழங்க ஈரோடு வருவாய் வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.6055/2025/அ2 நாள்.02.02.2026-ன் படி மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றி தருமாறு தெரிவித்துள்ளார். மேற்கண்டுள்ளபடி இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க ஈரோடு மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தீர்மானம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்: இ1/0414 /2026 (ம-1)

**111.) அனுமதிக்கப்பட்டது.**

**02.)** அனைத்து மாநகராட்சி / நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பூங்கா, விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறவிடங்களின் விபரங்களை மாநில அரசிதழில் அறிவிக்கை செய்ய வரும் மன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அதன் நகலினை காலதாமதமின்றி நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கடிதம் ந.க.எண். DMA/547/2026-TP2, நாள்-08.02.2026-இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, ஈரோடு மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் அமையும் பூங்கா, குழந்தைகள் விளையாடுமிடம் மற்றும் பொது திறவிடங்கள் உள்ளிட்ட பொது ஒதுக்கீட்டு

இடங்களில், 446 எண்ணிக்கையிலான இனங்களை அரசிதழில் வெளியிட நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுப்பி வைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்: இ2/0788 /2026 (மையம் - நகரமைப்பு பிரிவு)

**112.) அனுமதிக்கப்பட்டது**

**03.)** ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு தெற்கு உள்வட்டம், ஈரோடு 'ஆ' கிராமம், மண்டலம்-1 , வார்டு-A, பிளாக்.1, T.S. No.164-ல், சர்கார் புறம்போக்கு - சாலையின் மொத்தப்பரப்பு 0.43.77.5 ச.மீ பரப்பில் வீடு கட்டி குடியிருந்து வரும் 12 நபர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி T.S. No.164, சர்கார் புறம்போக்கு சாலை வகைபாடுடைய நிலத்தினை நத்தமாக வகைபாடு செய்து பட்டா வழங்க ஈரோடு வருவாய் வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.461/2025/அ2 நாள்.02.02.2026-ன் படி மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றி தருமாறு தெரிவித்துள்ளார். நிலையிலுள்ள தார்சாலை கிழபுறம் காலியாக உள்ள இடத்தில் அமைகிறது. மேற்கண்டுள்ளபடி நில மாற்றம் மேற்கொள்ள ஈரோடு மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தீர்மானம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்: இ1/ 668 2026 (ம-1)

**113.) அனுமதிக்கப்பட்டது**

**04.)** ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு தெற்கு உள்வட்டம், ஈரோடு 'இ' கிராமம், மண்டலம்-4, ரீ.ச.எண்.645/3, நத்தம் புல எண்.1698/23, சென்னிமலை சாலை தெற்கு, ரீ.ச.எண்.647/2, நத்தம் புல எண். 1700/6, சென்னிமலை சாலை வடக்கு,, ரீ.ச.எண். 667/3, சடையம்பாளையம் ரிங் ரோடு சாலை வடக்கு, நத்தம் புல

எண். 1856/35-ல் ,சர்கார் புறம்போக்கு - சாலையின் மொத்தப்பரப்பு 3.15.6 ச.மீ பரப்பில் வீடு கட்டி குடியிருந்து வரும் 7 நபர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி புல எண்களில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களை நத்தமாக வகைபாடு மாற்றம் செய்து பட்டா வழங்க ஈரோடு வருவாய் வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.461/2025/அ2 நாள்.09.02.2026-ன் படி மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றி தருமாறு தெரிவித்துள்ளார். சென்னிமலை சாலைக்கு வடக்கு தெற்கு பகுதியில் அமைந்துள்ளது. மேற்கண்டுள்ள படி நில மாற்றம் மேற்கொள்ள ஈரோடு மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தீர்மானம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்: இ1/668-1/2026 (ம-4)

**114.) அனுமதிக்கப்பட்டது**

**05.)** ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு தெற்கு உள்வட்டம், ஈரோடு 'அ' கிராமம், மண்டலம்- 1, வார்டு எண். 26, ரீ.ச.எண்.438/4, வண்டிப்பாதை புலத்தில் சாலையின் மொத்தப்பரப்பு 0.40.00 ஏர்ஸ் பரப்பில் 5 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி குடியிருந்து வரும் 16 நபர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி புல எண்களில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களை நத்தமாக வகைபாடு மாற்றம் செய்து பட்டா வழங்க ஈரோடு வருவாய் வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.461/2025/அ2 நாள்.10.02.2026-ன் படி மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றி தருமாறு தெரிவித்துள்ளார். மேற்கண்டுள்ள படி நில மாற்றம் மேற்கொள்ள ஈரோடு மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தீர்மானம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்: இ1/668-2 /2026 (ம-1 )

**115.) அனுமதிக்கப்பட்டது**

**06.)** ஈரோடு மாநகராட்சியின் வரவு செலவு திட்ட அறிக்கையில் 2025-2026 திருத்திய மதிப்பீடு மற்றும் 2026-2027-ம் ஆண்டு திட்ட மதிப்பீடு தயார்

செய்து மாமன்ற அனுமதி பெறும் பொருட்டு புத்தகமாக அச்சிடவும் மேலும் எழுது பொருட்களை வழங்கவும், பணியில் அனுபவமிக்க ஒப்பந்ததாரரிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம்.

| வ. எண் | பணி | சௌமியா ஸ்டேசனரிஸ் அண்ட் பிரிண்டர்ஸ், 171, கச்சேரி வீதி, ஈரோடு ரூ.பை. | | ஈரோடு மாவட்ட அச்சகத் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட்., இண்ட். எண்.1765 ரூ.பை. | | ஐஸ்வர்யா நோட் புக்ஸ்அண்ட் பிரிண்டர்ஸ்,13, அருள் மொழி வீதி,மரப்பாலம், ஈரோடு ரூ.பை. | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஒன்றின் விலை | 125-எண்ணிக்கையின் விலை | ஒன்றின் விலை | 125-எண்ணிக்கையின் விலை | ஒன்றின் விலை | 125-எண்ணிக்கையின் விலை |
| 1. | ஈரோடு மாநகராட்சி 2026-2027 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட நிதி நிலை அறிக்கை | 840.00 | 105000.00 | 780.00 | 97500.00 | 890.00 | 111250.00 |
| 2. | Executive bag | 825.00 | 103125.00 | 730.00 | 91250.00 | 840.00 | 105000 |
| 3. | ஸ்கிரிப்பிலிங் பேடு | 68.00 | 8500.00 | 60.00 | 7500.00 | 70.00 | 8750.00 |
| 4. | பேனா | 25.00 | 3125.00 | 20.00 | 2500.00 | 22.00 | 2750.00 |
| | மொத்தம் | **1758.00** | **219750.00** | **1590.00** | **198750.00** | **1822.00** | **227750.00** |
| | 18% GST | 316.00 | 39555.00 | 286.00 | 35775.00 | 328.00 | 40995.00 |
| | பெரு மொத்தம் | **2074.00** | **259305.00** | **1876.00** | **234525.00** | **2150.00** | **268745.00** |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ஈரோடு மாவட்ட அச்சகத் தொழிற் கூட்டுறவு சங்கம் விமிடெட், இண்ட். எண். 1765 அவர்களது விலைப் புள்ளியானது குறைவாக உள்ளதால் ரூ.2,34,525.00/- (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து ஐநூற்று இருபத்து ஐந்து மட்டும்), மேற்படி நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்கவும், மேற்கண்ட செலவினத்திற்கும், பணிகள் மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். பி1/8600/2025(மையம்)**

**116.) அனுமதிக்கப்பட்டது**

07.) ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு தெற்கு உள்வட்டம், ஈரோடு 'ஆ' கிராமம், மண்டலம் - 4 , வார்டு-E, பிளாக்.24, T.S. No.103-ல், அரசு புறம்போக்கு - சாலையின் மொத்தப்பரப்பு 0.2705.0 ஏர்ஸ் பரப்பில் மயானம் வகைபாடுடைய புலத்தினை நத்தமாக வகைபாடு மாற்றம் செய்து அதில் 5 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி குடியிருந்துவரும் 19 நபர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி T.S. No.103, அரசு புறம்போக்கு மயானம் வகைபாடுடைய புலத்தினை நத்தமாக வகைபாடு செய்து பட்டா வழங்க ஈரோடு வருவாய் வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.461/2025/அ2 நாள்.10.02.2026-ன்படி மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றி தருமாறு தெரிவித்துள்ளார். மேற்கண்டுள்ளபடி நிலமாற்றம் மேற்கொள்ள 18 நபர்களுக்கு வழங்க ஈரோடு மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தீர்மானம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்: இ1/ 668-4 /2026 (ம-4 )

**117.) அனுமதிக்கப்பட்டது**

**இடம்- ஈரோடு**
**நாள். 13.02.2026**

அ. நாகரத்தினம் 13/2/2026
**மேயர்.**
**ஈரோடு மாநகராட்சி.**
**ஈரோடு**

13/2/26

அனுப்புநர்

திருமதி. சு. நாகரத்தினம்,
மாண்புமிகு மேயர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு–638 001

**ந.க.எண். சி**3/2022 **நாள்**- 26.02.2026

அய்யா/அம்மையீர்,

பொருள்- ஈரோடு மாமன்றம் – 26-02-.2026-ஆம் தேதி மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற பிப்ரவரி-2026-ஆம் மாதத்திற்கான சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள் அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

பார்வை- 26/02/2026 ஆம் தேதிய சிறப்புக் கூட்ட பொருள்கள்

/////

ஈரோடு மாமன்றத்தின் 26.02.2026 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற மாமன்ற சிறப்புக்கூட்டத்தின் நடவடிக்கைகள் இத்துடன் தங்களுக்கு இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சு. நாகரத்தினம்
**மேயர்**, 26/2/2026

**ஈரோடு மாநகராட்சி,**

**இணைப்பு- கூட்ட நடவடிக்கைகள்**

26/2/26

## கூட்ட நடவடிக்கைகள்

1) ஈரோடு மாநகராட்சியின் வருவாய் நிதி மற்றும் மூலதனநிதி (Revenue & Capital Fund), குடிநீர் மற்றும் வடிகால் நிதி (Water Supply & Drainage Fund) மற்றும் ஆரம்பக்கல்வி நிதி (Elementary Education Fund) ஆகிய நிதிகளின் 2025-2026-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும், 2026-2027 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடும் மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு-**

மாநகராட்சியின் 2025-2026- ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டிற்கும் 2026-2027 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**கோப்பு எண். பி1/8600/2025 (மைய அலுவலகம்)**

**118.) ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**இடம்- ஈரோடு**
**நாள். 26.02.2026**

**மேயர்.** 26/2/2026
**ஈரோடு மாநகராட்சி.**

26/2/26

அனுப்புநர்

திருமதி. சு. நாகரத்தினம்,
மாண்புமிகு மேயர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு–638 001

**ந.க.எண். சி3/2022** **நாள்**- 26.02.2026

அய்யா/அம்மையீர்,

பொருள்- ஈரோடு மாமன்றம் – 26-02,,2026-ஆம் தேதி மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற பிப்ரவரி-2026-ஆம் மாதத்திற்கான சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

பார்வை- 26/02/2026 ஆம் தேதிய சாதாரணக் கூட்ட பொருள்கள்

/////

ஈரோடு மாமன்றத்தின் 26.02..2026 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள் இத்துடன் தங்களுக்கு இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.நாகரத்தினம்
**மேயர்**, 26/2/26

**இணைப்பு- கூட்ட நடவடிக்கைகள்** **ஈரோடு மாநகராட்சி,**

26/2/26

**கூட்டநடவடிக்கைகள்**

**கடந்த கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட கூட்டப்பொருள்கள் எதுவுமில்லை**

**கடந்த கூட்டத்தில் மீதம் வைக்கப்பட்ட மாமன்ற அலுவல்கள் எதுவுமில்லை**

**1.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4, வார்டு எண்.56ல் சேனாபதிபாளையம் வீதியில் உள்ள 'தி இந்தியன் பப்ளிக்ஸ்கூல்' என்ற கல்வி நிறுவனத்திற்கு கடந்த 2018-2019 ஆம் ஆண்டில் உதவி செயற்பொறியாளரால் அளவீடு செய்யப்பட்டு வழங்கப்பட்ட அறிக்கையின்படி 'எஸ்.எஸ்.சின்னசாமி, 'தி இந்தியன் பப்ளிக்ஸ்கூல்' என்ற பெயரில் கல்வி நிறுவன பயன்பாட்டில் 2017-2018 இரண்டாம் அரையாண்டு முதல் கீழ்க்கண்ட சொத்துவரிவிதிப்புகள் விதிக்கப்பட்டன.

| வ.எண் | வரிவிதிப்பு எண் | அரையாண்டு வரித்தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 056/056/904554 | 34575 |
| 2 | 056/056/904555 | 10608 |
| 3 | 056/056/904556 | 70518 |
| 4 | 056/056/904557 | 219 |
| 5 | 056/056/904558 | 3747 |
| 6 | 056/056/904559 | 11928 |
| 7 | 056/056/904560 | 7091 |
| 8 | 056/056/904561 | 28223 |
| 9 | 056/056/904562 | 144205 |
| 10 | 056/056/904563 | 42840 |
| 11 | 056/056/904564 | 120612 |
| 12 | 056/056/904565 | 22435 |
| 13 | 056/056/904566 | 94998 |
| 14 | 056/056/904567 | 21805 |
| 15 | 056/056/904568 | 73983 |

| | | |
|---|---|---|
| 16 | 056/056/904569 | 136679 |
| 17 | 056/056/904570 | 26205 |
| 18 | 056/056/904571 | 140621 |
| 19 | 056/056/904572 | 5359 |
| 20 | 056/056/904573 | 33132 |
| 21 | 056/056/904574 | 29188 |
| 22 | 056/056/904575 | 42194 |
| 23 | 056/056/904576 | 135744 |
| 24 | 056/056/904577 | 153477 |

மேற்காணும் வரிவிதிப்புகளில் வரிசை எண்.1 முதல் வரிசை எண். 23 வரையிலான சொத்துவரி விதிப்புகளுக்கு 2025-2026 இரண்டாம் அரையாண்டு வரையிலான சொத்துவரித் தொகை மனுதாரரால் நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது. தலைவர், 'தி இந்தியன் பப்ளிக்ஸ்கூல்' அவர்களின் கடிதத்தில் அப்பள்ளியில் உள்ள Auditiorium II என்ற கட்டித்திற்கு 056/056/904571 மற்றும் 056/056/904577 என்று இரு வரிவிதிப்புகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து., 056/056/904577 என்ற வரிவிதிப்பினை நீக்கம் செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்படி பட்டியலில் வரிசை எண்.24ல் கண்டுள்ள கட்டிடம் தற்போது நேராய்வு செய்யப்பட்டதில் அக்கட்டிடத்திற்கு 2018-2019 ஆம் ஆண்டு உதவி செயற்பொறியாளரால் வழங்கப்பட்ட அளவீட்டின் படி வரிவிதிப்பு செய்யும்போது 056/056/904571 என்ற வரிவிதிப்பு எண்ணிற்கான பரப்பளவிற்கு இரு முறை தவறுதலாக 2018-2019 ஆண்டு மாதாந்திர பட்டியலில் 2017-2018 இரண்டாம் அரையாண்டு முதல் 056/056/904577 என்ற வரிவிதிப்பு எண்ணில் மீண்டும் சொத்துவரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என தெரியவருகிறது. மேலும் இக்கட்டிடம் மறு அளவீடு செய்யப்பட்டு ஒரே கட்டிடத்திற்கு இரண்டு முறை வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே 056/056/904577 என்ற எண்ணுடைய கட்டித்திற்குண்டான சொத்துவரித் தொகை 2017-2018 இரண்டாம்

அரையாண்டு முதல் மனுதாரரால் செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு :-

| வ.எண் | வரிவிதிப்பு எண் | அரையாண்டு வரித்தொகை ரூ. | 2017-2018 இரண்டாம் அரையாண்டு முதல் 2025-2026 இரண்டாம் அரையாண்டு வரை உள்ள மொத்த நிலுவைத்தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 056/056/904577 | 153477 | 1965818 |

மேற்படி சொத்துவரிவிதிப்புக்கு உண்டான தொகையை கேட்பிலிருந்து 2017-2018 இரண்டாம் அரையாண்டு முதல் தற்போது வரை நீக்கம் செய்து வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**:-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண். அ1/0055/2026-(ம-4)**

## 119.) ஒத்தி வைக்கப்பட்டது.

2.) பொருள் : ஈரோடு மாநகராட்சி - ஓராண்டு குத்தகை இனங்கள் - மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி - 12.02.2026 அன்று நடைபெற்றது - உச்ச ஏலக் கேள்வி கோரியவர்களுக்கு குத்தகை உரிமம் வழங்குதல் - இதர இனங்களுக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை : பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நாள்:- 12.02.2026

---

இம்மாநகராட்சி 2025 - 2026 ஆம் ஆண்டுக்கான கீழ்கண்ட ஓராண்டு மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்கள் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 12.02.2026

அன்று காலை 11.30 மணிக்கு பிரதான அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்கள்.

| வரிசை எண் | குத்தகையினம் | கலந்து கொண்ட ஏலதாரர்கள் | ஏலதாரர் பெயர் திரு/ திருமதி. | ஏலக் கேள்வி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | **ஓராண்டு குத்தகை இனம்**<br>பேருந்து நிலையத்தில் புதிய வணிக வளாகத்தின் தரைகீழ் தளத்தில் இரு / நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் | 9<br>ஏல வைப்புத் தொகை<br>ரூ. 5,00,000/- | ராமகிருஷ்ணன் / ராஜேந்திரன் | ரூ. 27,00,000/-<br>(ஒப்பந்தப்புள்ளி) |
| | | | ராஜ்குமார் / சண்முக சுந்தரம் | -- |
| | | | செல்வராஜ் / அருணாச்சலம் | ரூ. 20,59,928/-<br>(ஒப்பந்தப்புள்ளி) |
| | | | எஸ். முருகன் | ரூ. 21,61,551/-<br>(ஒப்பந்தப்புள்ளி) |
| | | | எஸ். தமிழ்செல்வி | -- |
| | | | தனசேகரன் / மாதப்பன் | ரூ. 21,10,599/-<br>(ஒப்பந்தப்புள்ளி) |
| | | | கே. ஜெகன் / கந்தசாமி | ரூ. 37,50,200/-<br>(ஒப்பந்தப்புள்ளி) |
| | | | என். ஸ்ரீதர் | ரூ. 9,00,000/-<br>(ஒப்பந்தப்புள்ளி) |
| | | | டி. ரங்கநாயகி | -- |
| 2 | **கனிமார்க்கெட் அனைத்து வணிகமும் செய்யும் வணிக வளாகத்தில் உள்ள முன்புற** பகுதியில் குழந்தைகள் பொழுது போக்கிற்கு பேட்டரி மூலம் இயங்கக்கூடிய இருசக்கர வாகனம், நான்கு சக்கர வாகனம் மற்றும் புகை வண்டி இயக்கி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1<br>ஏல வைப்புத் தொகை<br>ரூ. 2,00,000/- | எம். தனசேகரன் | **ஏலத்தில்**<br>**ரூ. 3,26,000/-** |
| 3 | **மூன்றாண்டு குத்தகை இனம்**<br>சோலார் பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள புறநகர் பேருந்து நிலைய வளாகத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகம் தரைத்தளம் (Terminal Block) கடை எண். 14 | 1<br>ஏல வைப்புத் தொகை<br>ரூ. 7,00,000/- | சுகுமாரன் / வீரபாண்டியன் | **ஏலத்தில்**<br>**ரூ.18,800/-** |

மேற்காண் பட்டியலில் வரிசை எண். 1 இல் குறிப்பிட்டுள்ள ஓராண்டு குத்தகை இனமான பேருந்து நிலையத்தில் புதிய வணிக வளாகத்தின் தரைகீழ் தளத்தில் இரு / நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு மேற்கண்ட நபர்கள் பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டுள்ளது அதில் திரு. ஜெகன், த/பெ. கந்தசாமி என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் உச்ச ஏலக் கேள்வி தொகையாக ரூ. 37,50,200/- கோரியுள்ளார். இது அரசாங்க மதிப்பு ரூ. 28,00,000/- யை விட கூடுதலாக உள்ளது. எனவே இவ்உச்ச கேள்வியினை ஏற்று திரு. க. ஜெகன் என்பவருக்கு ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் ஒப்படை செய்யலாம்.

வரிசை எண். 2 இல் குறிப்பிட்டுள்ள ஓராண்டு குத்தகை கனிமார்க்கெட் அனைத்து வணிகமும் செய்யும் வணிக வளாகத்தில் உள்ள முன்புற பகுதியில் குழந்தைகள் பொழுது போக்கிற்கு பேட்டரி மூலம் இயங்கக்கூடிய இருசக்கர வாகனம், நான்கு சக்கர வாகனம் மற்றும் புகை வண்டி இயக்கி மூலம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு திரு. எம். தனசேகரன் என்பவர் பொது ஏலத்தில் உச்ச ஏலக் கேள்வி தொகையாக ரூ. 3,26,000/- கோரியுள்ளார். அரசாங்க மதிப்பு ரூ. 3,00,000/- யை விட கூடுதலாக உள்ளது. இவ்உச்ச கேள்வியினை ஏற்று திரு. எம். தனசேகரன் என்பவருக்கு ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் ஒப்படை செய்யலாம்.

வரிசை எண். 3 இல் குறிப்பிட்டுள்ள சோலார் பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள புறநகர் பேருந்து நிலைய வளாகத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகம் தரைத்தளம் (Terminal Block) கடை எண். 14 ற்க்கு திரு. சுகுமாரன் / சுந்தரபாண்டியன் என்பவர் பொது ஏலத்தில் உச்ச ஏலக் கேள்வி தொகையாக ரூ. 18,800/- கோரியுள்ளார். அரசாங்க மதிப்பு ரூ. 18,675/- யை விட சற்று கூடுதலாக உள்ளது. இவ்உச்ச கேள்வியினை ஏற்று திரு. சுகுமாரன் / சுந்தரபாண்டியன் என்பவருக்கு ஒப்படை செய்யும் நாள் முதல் ஒன்பது ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் ஒப்படை செய்யலாம்.

மேலும் , சோலார் பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள புறநகர் பேருந்து நிலைய வளாகத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகம் தரைத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள கடைகளுக்கு செல்வதற்கு வழித்தடங்கள் இன்றி அமைக்கப்பட்டுள்ளதால் உட்புறம் உள்ள கடைகளுக்கு வழிதடத்திற்கு இடையூறாக உள்ளதென மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நேரில் ஆய்வு செய்த போது இடையூறாக உள்ள தடுப்புச்சுவர் உள்ள கடை எண். 33,34,46,47,65,66,78,79 - களை அகற்றி வழித்தடமாக மாற்றம் செய்ய கோரி தெரிவித்த அறிவுறுதலின்படி, மேற்கண்ட கடைகளை வழித்தடமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட கடை எண்களை பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி பட்டியல் இருந்து நீக்கம் செய்யலாம்.

பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்படாத இதர இனங்களை மீண்டும் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்:- அ1/489/2024 (மையம்)**

## 120.) அனுமதிக்கப்பட்டது

3.) பொருள் : ஈரோடு மாநகராட்சி - பவானி மெயின் ரோடு க.ச.எண். 13/2 இல் 12 ஏக்கர் பரப்பளவில் தனியார் கால்நடை (மாடு) சந்தை நடத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வழங்க கோருதல் - தொடர்பாக.

---

ஈரோடு மாநகரட்சி மண்டலம் - 1 க்குட்பட்ட பகுதியில் பவானி மெயின் ரோடு க.ச.எண். 13/2 - இல் 12 ஏக்கர் பரப்பளவில் தனியார் கால்நடை சந்தை நடத்துவதற்கு அனுமதி வழங்க கோரி திரு. கி. பாலசுப்ரமணியன் என்பவர் இடத்திற்கான பத்திரம் சொத்துவரி செலுத்திய ரசீது நகல் மற்றும் வரைபடம் இணைத்து விண்ணப்பித்துள்ளார்.

எனவே தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, விதிகள் 2023 விதி எண். 108 (அ) வின் படி மனுதாரர் திரு. கி. பாலசுப்ரமணியன் என்பவருக்கு கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு 01.04.2026 முதல் 31.03.2027 வரையிலான காலத்திற்கு தனியார் கால்நடை (மாடு) சந்தை நடத்துவதற்கு உரிமம் வழங்க மாமன்றம் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. மாட்டுச் சந்தைக்கு வரும் வாகனங்களை பிரதான சாலையில் நிறுத்தக்கூடாது.
2. மாட்டுச் சந்தைக்கு அருகில் உள்ள பள்ளிக்கூடங்கள் மற்றும் வழிபாட்டுதளங்கள் ஆகியவற்றுக்கு வரும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாமல் மாட்டுச் சந்தை நடத்தப்பட வேண்டும்.
3. மாட்டுச் சந்தை பகுதியில் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்
4. மாட்டுச் சந்தைவளாகத்தில் மின்விளக்கு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.
5. மாட்டுச் சந்தை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளை சுகாதாரமாக வைத்துக் கொள்ள வேண்டும்.
6. மாட்டுச் சந்தை நடத்துவதற்கு காவல் துறை மற்றும் பிற துறைகளின் உரிய அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்
7. மாட்டுச் சந்தை காலை 5.00 முதல் பிற்பகல் 6.00 மணி வரை மட்டுமே நடத்தப்பட வேண்டும்.
8. சேவை வரி ( GST )மற்றும் வருமான வரி (IT) தாக்கல் செய்யப்பட்ட விவரம் பட்டய கணக்கரால் சான்றொப்பமிட்டு சமர்ப்பிக்க வேண்டும்.
9. ஆண்டு வருமானத்தில் 25% கட்டண தொகை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.
10. மாடு ஒன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட சுங்க கட்டணம் மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும். முறையான ரசீதுகள் வழங்கப்பட வேண்டும்.

**அலுவலக குறிப்பு:-**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்:-அ1/489/2024 (மையம்)

**121.) அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது, 11, 16 மற்றும் 43- வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் ஆட்சேபணையை பதிவு செய்யப்பட்டது .**

**4.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3 வார்டுஎண் 44 காந்திஜி ரோடு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பயன்பாட்டில் இருக்கும் Electrical lift-ன் Battery பழுதாகியும்மேலும், Motor Gear box Oil service செய்ய வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. Electrical lift-ன்அவசர அவசியம் கருதிதமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2022 (தமிழ்நாடுசட்டம் 35/2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7) வதுபிரிவின்கீழ் மேற்படி பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு மேற்படி EMPEROR LIFTS ன்அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமானM/s Swift Engineering நிறுவனத்தின் விலைப்புள்ளிகள் பெற்று மேற்படி பழுதுகளை சரிசெய்து இயக்கத்திற்கு கொண்டு வந்தமைக்கும் அதற்கானபட்டியல்தொகைரூ.33,960/- ஐ. Swift Engineering நிறுவனத்திற்கு வழங்கியதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்புஎண்.இ2/0165/2025 (ம-3)

**122.) பதிவு செய்யப்பட்டது.**

**5.)** ஈரோடு மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் சிப்பம்-5ல் கட்டி முடிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (50.55 MLD கொள்ளளவு) வடிவமைத்து கட்டுமானம் செய்து, இயக்குதல் மற்றும் பராமரிப்பு

(O&M) பணிகளை ஐந்து ஆண்டுகளுக்கு D.B.O.T முறையில் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஒப்பந்தம் செய்யப்பட்டு, ஆறுமாத சோதனை ஓட்டம் (Trial Run) முடிந்த பிறகு, ஐந்து ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு (O&M) பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 19.12.2025 அன்று நடைபெற்ற காணொளி காட்சி கூட்டத்தில் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்கள் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களை இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்வதற்கு one city one operator என்ற வழிகாட்டு முறையில் KPI அடிப்படையில் ஒப்பந்த விதிமுறைகள் உருவாக்க அரசால் நியமிக்கப்பட்ட கலந்தாலோசகர் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிற்கும் நேரில் சென்று கழிவு சுத்திகரிப்பு தொழில் நுட்பவகையினை (Type of treatment technology) ஆய்வு செய்து அதற்கேற்றார்போல் பொதுவான விதி முறைகளை (Common rules) உருவாக்க அறிக்கை தயார் செய்ய தரவேண்டும் என தெரிவித்துள்ளார்கள்.

தற்சமயம், மேற்கண்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பு (O&M) பணிகள் மேற்கொண்டு வரும் திருவாளர். RAMKY INFRASTRUCTURE LIMITED, Chennai நிறுவனத்தாரின் ஒப்பந்த காலம் 31.12.2025 தேதியுடன் முடிவடைந்து மேலும், மூன்று மாதகாலத்திற்கு பணி நீட்டிப்பு செய்த நிலையில் 31.03.2026 தேதியுடன் முடிவடைகிறது.

எனவே புதியதாக டெண்டர் கோரி வேலை உத்திரவு வழங்கும் வரை மேலும், மூன்று மாதங்களுக்கு 01.04.2026 முதல் 30.06.2026 வரையிலோ அல்லது அரசாணை எண் 113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப. 3) துறை, நாள் 17.08.2022-ன் படி KPI (key performance Indicator) முக்கிய செயல்திற குறியீடுகள் நிர்ணம் செய்து இயக்கி பராமரிப்பு குறித்து உரிய வழிமுறைகள் அரசின் ஒப்புதல் பெற்று விரைவில் வெளியிடப்படும் வரை இம்மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்தினை (50.55 MLDகொள்ளளவு) இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை தற்சமயம் மேற்கொண்டு வரும் திருவாளர். RAMKY

INFRASTRUCTURE LIMITED, Chennai நிறுவனத்தார் ஒப்பந்த அடிப்படையில், ஏற்கனவே வழங்கியுள்ள விலைவிகித்திலேயே மூன்று மாதங்களுக்கு 01/04/2026 முதல் 30/06/2026 வரையிலோ அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள KPI வழிமுறைகள் அரசினரால் பிறப்பிக்கப்படும் தேதி வரையிலோ இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.25.05 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்புஎண். இ4/6459/2010 (மையம்)

## 123.) அனுமதிக்கப்பட்டது.

**6.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் -2 க்குட்பட்ட வார்டு எண். 29 சம்பத் நகர், தியாகி குமரன் சாலையில் போக்குவரத்தின் பாதுகாப்பின் நலன் கருதி நாளது தேதி வரை தற்காலிகமாக இருப்பிலான போக்குவரத்து தடுப்புகள் (Traffic Barrier) இருந்து வந்தது. மேற்படி சாலை பாதுகாப்பின் நலன் கருதி இரும்பு தடுப்புகளை அகற்றி நிரந்திரமாக கான்கிரீட்டிலான போக்குவரத்து தடுப்புகள் (Precaste Concrete Traffic Barrier) அமைக்க வேண்டும் என 24.11.2025 நாளன்று நடந்த சாலை பாதுகாப்பு ஆய்வு கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. எனவே பொது மக்கள் நலன் மற்றும் சாலை பாதுகாப்பு நலன் கருதி மேற்கண்ட பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7)-ன்படி மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2022 பிரிவு 57(7)-ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலை விகிதம் வழங்கிய திருவாளர். KM PALANISAMY & CO ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,90,216/- யை

திருவாளர். KM PALANISAMY & CO ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.இ1./3998.2026 (ம-2)**

**124.) பதிவு செய்யப்பட்டது.**

**7.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சூரியம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம், கொத்துகாரன்புதூர் தலைமை நீரேற்று நிலையம், பி.பெ.அக்ரஹாரம் தலைமை நீரேற்று நிலையம், பெரிய சேமூர் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் வெண்டிபாளையம் தலைமை நீரேற்று நிலையம் ஆகியவை இயக்கத்தில் உள்ளதால் அவைகளுக்கு பணியாளர்களை நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

இம்மாநகராட்சியில் பயன்பாட்டில் உள்ள பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவினை சார்ந்த வாகனங்களை நிறுத்துவதற்கு மண்டலம்-1 வைராபாளையம், மண்டலம்-2 செங்குந்தர் நகர் மற்றும் வாசுகி வீதி, மண்டலம்-3 முத்தம்பாளையம் மற்றும் மண்டலம்-4 மோகன் தோட்டம் ஆகிய பகுதிகளில் புதிதாக வாகன நிறுத்தும் இடங்கள் கட்டப்பட்டுள்ளன. எனவே, மேற்கண்ட 5 வாகனங்கள் நிறுத்தும் இடங்களில் வாகனங்களை பாதுகாக்க பணியாளர்களை நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

மேலும், கழிவுநீர் மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாடுகள் கையேடு 2023-ல் தெரிவித்துள்ளவாறு பொதுமக்களுக்கு பாதுகாப்பான முறையில் கழிவுநீர் அகற்றும் வாகன சேவை வழங்கும் பொருட்டு இலவச தொலைபேசி எண் (Toll Free Number) 14420 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே. மேற்கண்ட இலவச தொலைபேசி எண்ணில் தெரிவிக்கப்படும் விபரங்களை பெற்று அதற்குரிய பதிவேட்டில் பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ள மைய அலுவலகம் மற்றும்

நான்கு மண்டலங்களிலும் பணியாளர்களை நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

எனவே, மேற்கண்டவாறு தலைமை நீரேற்று நிலையங்கள், வாகன நிறுத்துமிடங்கள், பாதுகாப்பு மற்றும் இலவச தொலைபேசி எண்களின் விபரங்களை பெறுதல் பணிக்கு மொத்தம் 27 பணியாளர்கள் (இருபத்தெழு மட்டும்) நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். இந்த ஒப்பந்தகாலம் 31.5.2026 வரை அனுமதிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/EA2 நாள்: 02.10.2021-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படியும், ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.கஎண். 6924/2023/எ2 நாள். 26.09.2023ன் படி தயார் செய்யப்பட்டுள்ள மொத்த மதிப்பீடு ரூ.42.92 இலட்சம் ஆகும். இந்நிலையில் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ன் தேர்தல் அறிவிக்கை வரப்பெற்று தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலுக்கு வர உள்ளது. எனவே 01.06.2026 முதல் 30.11.2026 வரை மேலும் 6 மாதங்களுக்கு குடிநீர் விநியோகப்பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு ரூ.42.92இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண். இ1/6154/2024(மையம்)**

## 125.) அனுமதிக்கப்பட்டது

**8.)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட Modernization of the Bus terminal in the ABD area of Erode பணிக்கு விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிக்கும் பணிக்கு செலுத்திய EMD தொகை ரூ.12,000/- திரும்ப வழங்க கேட்டு M/s.Sonne Infrastructure Pvt Ltd, Chennai நிறுவனத்தார் விண்ணப்பித்துள்ளார்கள். மேற்படி நிறுவனம் செலுத்திய EMD தொகை ரூ.12,000/-

காலாவதியான வைப்பு பதிவேட்டிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. எனவே மேற்படி காலாவதி வைப்புத் தொகை ரூ.12,000/- M/s. Sonne Infrastructure Pvt Ltd, Chennai நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண். இ1/ 6643/2025 (மையம்)**

## 126.) அனுமதிக்கப்பட்டது

**9.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 வார்டு எண்-4 மங்களகிரி நகர் பகுதியில் சுமார் 220 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் உள்ள வீடுகளிலிருந்து வரும் கழிவு நீர், வடிகால் இல்லாத காரணத்தால் மழைக்காலங்களில் மழைநீர் மற்றும் கழிவு நீர் சாலையில் தேங்கி நின்று சேறும், சகதியுமாக உள்ளதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாகவும் மற்றும் பொது சுகாதார கேடு விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் கழிவு நீர் வடிகால் அமைத்திட பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பொதுமக்களின் நலன் கருதி மேற்படி கழிவு நீர் வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.28.00/-இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்.இ1/0051 /2026 (ம-4)**

## 127.) அனுமதிக்கப்பட்டது

**10.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 க்குட்பட்ட வார்டுஎண். 1 செங்குந்தபுரம் , சாணார்பாளையம் மற்றும் வார்டு எண்.3 மாதேஸ்வரன் நகர் பகுதியில் உள்ள பொதுகழிப்பிடத்தில் உள்ள மின்விளக்குகள் , கதவுகள் , பீங்கான் ஆகியவை பழுது ஏற்பட்டு பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும்

நச்சுத்தொட்டி கழிவு நீர் சேம்பர்களில் மூடிகள் பழுது ஏற்பட்டு நீர்கசிவு ஏற்படுவதால் துர்நாற்றம் விசுகிறது. இதனால் அருகில் உள்ள பொதுமக்கள் புகார் தெரிவித்து வருகிறார்கள், எனவே மேற்படி கழிப்பிடங்களில் உள்ள பழுதுகளை சரிசெய்யவும் மற்றும் வர்ணம் பூசுதல் பணி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.80/- இலட்சத்திற்கு கல்வி நிதியில் மேற்கொள்ள மாமன்றத்தின் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மாமன்ற அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1 / 3244 /2025 ( ம-1)

## 128.) அனுமதிக்கப்பட்டது

**11.)** ஈரோடு மாநகராட்சி நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022இல் வார்டு எண். 34இல் போட்டியிட வைப்புத்தொகை ரூ.4000/- திருமதி.K.திவ்யா க/பெ.D.குமரேசன் அவர்களால் பற்றுச்சீட்டு எண்.056/401/2/21-22/0004591 நாள்.04.02.2022 மற்றும் வார்டு எண். 34இல் போட்டியிட வைப்புத்தொகை ரூ.4000/- திருமதி.D. மரகதவள்ளி க/பெ.T.தர்மசிவம் அவர்களால் பற்றுச்சீட்டு எண்.056/401/2/21-22/0004590 நாள்.04.02.2022-களின்படி செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பதார்கள், ஈரோடு மாநகராட்சி நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022இல் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்ததால் தங்களது தேர்தல் வைப்புத் தொகை மொத்தம் ரூ.8000/-ஐ திரும்ப வழங்க கோரியுள்ளார்கள்.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், மாநகராட்சி வார்டு உறுப்புனர்கள் தேர்தல் முடிவுகள் 2022-இன்படி, திருமதி.D. மரகதவள்ளி க/பெ.T.தர்மசிவம் என்ற விண்ணப்பதாரர் வெற்றிபெற்ற வேட்பாளர் பெற்ற வாக்குகளில் 3/2 சதவீதம் வாக்குகள் பெற்றுள்ளார் மேலும் திருமதி.K.திவ்யா க/பெ. D.குமரேசன் என்ற விண்ணப்பதாரர் வார்டு எண். 34க்கான தேர்தலில் போட்டியிடவில்லை.

ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி அவர்களால், மேற்கண்ட விண்ணப்பதாரர்களுக்கு தேர்தல் வைப்புத்தொகை மொத்தம் ரூ.8000/-ஐ திரும்ப வழங்க 19.01.2026அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2021-22 முடியவுள்ள வைப்புத்தொகைகள் மூன்றாண்டு காலம் முடிவடைந்துள்ளதால், ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று காலங்கடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

தேர்தல் வைப்புத்தொகைகள் மாநகராட்சி பதிவேட்டில் பதியப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | 2021-22 வைப்புத்தொகை மற்றும் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேடு தொகுப்பு | வருடம் | ப.எண் | வரிசை எண் | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 01 | RF – 4020 – Election Deposit & RF – 4020 – Election Deposit Laps | 2021-2022 & 2024-25 | 38 & 22 | 178 & 127 | 4000/- |
| 02 | RF – 4020 – Election Deposit & RF – 4020 – Election Deposit Laps | 2021-2022 & 2024-25 | 38 & 22 | 176 & 125 | 4000/- |
| | | | | மொத்தம் ரூ. | 8000/- |

எனவே 28.03.2025-ஆம் தேதிய ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி அவர்களின் அனுமதியினைத்தொடர்ந்து, மேற்கண்ட தேர்தல் வைப்புத்தொகைகள் காலங்கடந்த தேர்தல் வைப்புக்கணக்கில் வைக்கப்பட்டுள்ளதால், காலங்கடந்த தேர்தல் வைப்புத்தொகை வருவாய் நிதி தொகை ரூ.8000/-ஐ திருமதி.K.திவ்யா க/பெ.D.குமரேசன் மற்றும் திருமதி.D. மரகதவள்ளி க/பெ. T.தர்மசிவம் ஆகியோர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:-**

அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.** சி4/036/2026 (மையம்)

## 129.) அனுமதிக்கப்பட்டது

**12.)** ஈரோடு மாநகராட்சி, மண்டலம்-1ல் 15 வார்டுகளில் சுமார் 46122 எண்ணிக்கையில் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார்அலுவலகங்கள் உள்ளன. தற்போது நாள் ஒன்றுக்கு சராசரியாக 35 மெ.டன் அளவில் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கமடையாமலும், பொதுசுகாதார சீர்கோடு ஏற்படாமலும், நோய்த்தொற்று ஏற்படாமலும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தினசரி அகற்றப்பட வேண்டும். ஆனால் பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாட்கள் இல்லை. ஆகையால் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தை கருதிதற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் 19.12.2025 தேதிய அனுமதியின்படி துப்புரவுபணி செய்து வருகின்றனர். இவர்களது பணிக்காலம் மார்ச்-2026 உடன் முடிவடைகிறது. தற்போது தொடர்ந்து திடக்கழிவு மேலாண்மைபணி (SWM) மேற்கொள்ளும் சுயஉதவிக்குழு பணியாளர்கள் 230 நபர்களுக்கு ஏப்ரல் 2026, மே 2026 மற்றும் ஜூன்-2026 ஆகிய மூன்று மாதகாலத்திற்கு (89 நாட்களுக்கு) மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.5816/2024/(எ-2) நாள்.10.07.2024ன்படி நாள் ஒன்றுக்கு ரூ.754/- வீதம் வழங்கவும், மாநகராட்சி நிர்வாகப்பங்கு தொகை ரூ.1% மற்றும் மாநகராட்சி பங்கு தொகை ரூ.12%-ம் இரண்டும் சேர்த்து 13% EPF அலுவலகத்திலும், ESI 3.25% ESI அலுவலகத்தில் செலுத்தவும், தினக்கூலிக்கான செலவினம் கீழ்க்கண்டவாறு மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய தினக்கூலிவிபரம் | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | தூய்மைப் பணியாளர்கள் (SWM) | 230 | SWM 230x89x754 =15434380/- (12%+1%) 13%=2006469/- ESI 3.25% =501617/- | ரூ.1,79,42,466/- |

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. மூன்று மாதமோ அல்லது வெளிஆதார முகமை மூலம் தொடங்கும் நாள் இவற்றில் எது முன்னரோ அதுவரை அனுமதிக்கலாம்.

கோப்பு எண். .எச்1/421/2023 (ம-1)

## 130.) அனுமதிக்கப்பட்டது

**13.)** ஈரோடு மாநகராட்சி, மண்டலம்-1ல் 15 வார்டுகளில் சுமார் 46122 எண்ணிக்கையில் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் உள்ளன. தற்போது நாள் ஒன்றுக்கு சராசரியாக 35 மெ.டன் அளவில் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகளை சேகரிக்கவும், தேக்கமடையாமலும், பொதுசுகாதார சீர்கோடு ஏற்படாமலும், நோய்த்தொற்று ஏற்படாமலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தினசரி அகற்றப்பட வேண்டும். இப்பணிகளை மேற்கொள்வதற்கு 9 கனரக வாகனங்கள் மற்றும் 40 இலகுரக வாகனங்கள் என மொத்தம் 49 எண்ணிக்கையிலான வாகனங்கள் உள்ளன இவ்வாகனங்களை இயக்குவதற்கு 2 எண்ணிக்கையிலான நிரந்தர ஓட்டுநர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். ஆகவே, பற்றாக்குறையாக உள்ள ஓட்டுநர் பணிக்கு தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் 19.12.2025 தேதிய அனுமதியின்படி ஓட்டுநர் பணி செய்து வருகின்றனர். இவர்களது பணிக்காலம் மார்ச்-2026 உடன் முடிவடைகிறது. தற்போது

தொடர்ந்து ஓட்டுநர்பணி (Driver) மேற்கொள்ளும் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் 45 நபர்களுக்கு ஏப்ரல் 2026, மே 2026 மற்றும் ஜூன்-2026 ஆகிய மூன்று மாதகாலத்திற்கு (89 நாட்களுக்கு) மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.5816/2024/(எ-2) நாள்.10.07.2024 ன்படி நாள் ஒன்றுக்கு ரூ.792/- வீதம் வழங்கவும், மாநகராட்சி நிர்வாகப்பங்கு தொகை ரூ.1% மற்றும் மாநகராட்சி பங்கு தொகை ரூ.12%-ம்சேர்த்து 13% EPF அலுவலகத்திலும், ESI 3.25% ESI அலுவலகத்தில் செலுத்தவும், தினக்கூலிக்கான செலவினம் கீழ்க்கண்டவாறு மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின்தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஓட்டுநர்கள் (Drivers) | 45 |

| வ. எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஓட்டுநர்கள் (Drivers) | 45 | Drivers 45x89x792=3171960/- (12%+1%)13%=412355/- ESI (3.25% =103089/- | 36,87,404/- |

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. மூன்று மாதமோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் தொடங்கும் நாள் இவற்றில் எது முன்னரோ அதுவரை அனுமதிக்கலாம்.

கோப்பு எண்..எச்1/421/2023 (ம-1)

## 131.) அனுமதிக்கப்பட்டது

14.) பணிக்குழு – ஈரோடு மாநகராட்சி - சுய உதவிக்குழு தூய்மை பணியாளர் – ஊதியம் வழங்க மாமன்ற ஒப்புதல் பெறுவது – தொடர்பாக

பொருள்

பார்வை:

1. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசாணை எண்.G.O.Ms.No.36, நாள் 16.06.2023.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல் முறை உத்திரவு ந.க.எண். 5816/2024/எ2 நாள்; 10.07.2024.

ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2ல் உள்ள 15-வார்டுகளில் சுமார் 58177 குடியிருப்புகள் உள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 70மெ.டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கம் ஏற்பட்டு, பொது சுகாதார சீர்கேடு ஏற்படாமல், மேலும் நோய்த் தொற்று ஏற்படும் அவசியத்தை கருதியும் முறையாக தினசரி அப்புறப்படுத்தப்பட வேண்டும். ஆனால் இப்பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லை. ஆகையால் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தை கருதி தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது திடக்கழிவு மேலாண்மை பணி (SWM) மேற்கொள்ளும் சுய உதவிக்குழு பணியாளர்கள் 350 நபர்களுக்கு 01.04.2026 முதல் 30.06.2026 முடிய மூன்று மாத காலத்திற்கு, பார்வையில் கண்டுள்ள ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல் முறை உத்திரவு ந.க.எண். 5816/2024/எ2 நாள்; 10.07.2024. ன் படி தூய்மை பணியாளர்களுக்கு (Other Unskilled Menials) நாள் ஒன்றுக்கு ரூ.754/- வீதம் ஊதியம் வழங்குவதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.2,76,10,538/-ஐ மாநகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தூய்மைப் பணியாளர்கள் (SWM) | 350 | SWM 350x90x754 = 2,37,51,000/- (12%+1%) 13% =30,87,630/- ESI (3.25%)= 7,71,908 | 2,76,10,538/- |

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.
2. ஒரு மாதமோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் தொடங்கும் நாள் இவற்றில் எது முன்னரோஅதுவரை அனுமதிக்கலாம்.

**கோப்புஎண்.1014/2022/எச்1(ம-2)**

## 132.) அனுமதிக்கப்பட்டது

15.) பணிக்குழு – ஈரோடு மாநகராட்சி - சுய உதவிக்குழு – ஓட்டுநர் ஊதியம் வழங்க மாமன்ற ஒப்புதல் பெறுவது – தொடர்பாக

பொருள்

பார்வை:

1. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசாணை எண்.G.O.Ms.No.36, நாள் 16.06.2023.

2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல் முறை உத்திரவு ந.க.எண். 5816/2024/எ2 நாள்: 10.07.2024.

.....

ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2ல் உள்ள15-வார்டுகளில் சுமார் 58177 குடியிருப்புகள் உள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 70 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கம்

ஏற்பட்டு, பொது சுகாதார சீர்கேடு ஏற்படாமல், மேலும் நோய்த் தொற்று ஏற்படும் அவசியத்தை கருதியும் முறையாக தினசரி அப்புறப்படுத்தப்பட வேண்டும். இப்பணிகளை மேற்கொள்வதற்கு 7 (HCV) கனரக வாகனங்களும், 39 இலகுவகை (LCV) வாகனங்களும் உள்ளது. நிரந்தர ஓட்டுநர்கள் மொத்தம் 3பேர் மட்டும் உள்ளனர். ஆகவே, பற்றாக்குறையாக உள்ள ஓட்டுநர் பணிக்கு தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஓட்டுநர் பணி (Driver) மேற்கொள்ளும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் 62 நபர்களுக்கு 01.04.2026 முதல் 30 .06. 2026 .

முடிய மூன்று மாத காலத்திற்கு நீட்டித்து வைத்துக் கொள்ளவும், பார்வையில் கண்டுள்ள ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல் முறை உத்திரவு ந.க.எண். 5816/2024/எ2 நாள்; 10.07.2024. ன் படி ஓட்டுநர்களுக்கு (Semi-Skilled Labourers) நாள் ஒன்றுக்கு ரூ.792/- வீதம் ஊதியம் வழங்குவதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.51,37,506/-ஐ மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஓட்டுநர்கள்(Drivers) | 62 |

| வ. எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | ஓட்டுநர்கள் (Drivers) | 62 | Drivers 62x90x792 =44,19,360/-<br>EPF (12%+1%) 13% = 5,74,517/-<br>ESI (3.25%) = 1,43,629/- | 51,37,506/- |

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.

2. ஒரு மாதமோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் தொடங்கும் நாள் இவற்றில் எது முன்னரோ அதுவரை அனுமதிக்கலாம்.

**கோப்பு .எண்.1014/2022/எச்1(ம-2)**

## 133.) அனுமதிக்கப்பட்டது

**16.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3ல் உள்ள 15-வார்டுகளில் சுமார் 48134 குடியிருப்புகள் உள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 40 மெ.டன் திடக்கழிவு உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கம் ஏற்பட்டு, பொது சுகாதார சீர்கேடு ஏற்படாமல் முறையாக தினசரி அப்புறப்படுத்தப்பட வேண்டும். ஆனால், இப்பணிகளை மேற்கொள்ளவதற்கு போதுமான பணியாளர்கள் இல்லை. தற்போது 106 நிரந்தரப் தூய்மைப் பணியாளர்கள் மட்டும் உள்ளனர். ஆகையால் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தை கருதி தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் 308 நபர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த அனுமதி 31.03.2026 முடிவதால் திடக்கழிவுமேலாண்மை பணியை மேற்கொள்ள ஏற்கனவே சுயஉதவிக்குழுவில் தற்காலிகமாக பணிபுரிந்து வரும் சுய உதவிக்குழு பணியாளர்கள் 308 நபர்களை 01.04.2026 முதல் 30.06.2026 முடிய 3 மாத காலத்திற்கு (90 நாட்களுக்கு) நீட்டித்துக் கொள்ளவும், பார்வையில் காணும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.5816/2024/(எ-2)நாள்.10.07.2024ன் படி தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதப்படி பணிபுரியும் நாட்களுக்கு ஊதியம் நாளொன்றுக்கு ரூ.754/. வீதிதம் ஊதியம் வழங்கவும், அதற்காகும் செலவினம் ரூ. 2,42,97,273/- ஆகிறது.

| வ.எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்கவேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தூய்மைப் பணியாளர்கள் (SWM) | 308 | 90X308X754= 2,09,00,880/- (Employer COntribution) EPF(12%+1%) 13% = 27,17,114/- ESI(3.25)= 6,79,279/- | 2,42,97,273/- |

ஆகவே 01.04.2026 முதல் 30.06.2026 90 நாட்களுக்கான ஊதியமாக ரூ.2,42,97,273/- கூடுதல் செலவினம் மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. மூன்று மாதமோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் தொடங்கும் நாள் இவற்றில் எது முன்னரோ அதுவரை அனுமதிக்கலாம்.

**கோப்புஎண்.எச்1/0113/2024(ம-3)**

## 134.) அனுமதிக்கப்பட்டது

**17.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3ல் உள்ள 15-வார்டுகளில் சுமார் 48134 குடியிருப்புகள் உள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 40 மெ.டன் திடக்கழிவு உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கம் ஏற்பட்டு, பொதுசுகாதார சீர்கேடு ஏற்படாமலும், மேலும் நோய்த் தொற்றுஏற்படும் அவசியத்தைகருதியும் முறையாக தினசரி அப்புறப்படுத்தப்பட வேண்டும். ஆனால், இப்பணிகளை மேற்கொள்ளவதற்கு 9 (HCL) கனரக வாகனங்களும், 45 இலகுவகை (LCV) வாகனங்களும், உள்ளது. ஆனால் இநத் வாகனங்கள் இயக்குவதற்கு 4 நிரந்தர ஓட்டுநர்கள் மட்டும் உள்ளனர். ஆகவே பற்றாக்குறையாக உள்ள ஓட்டுநர் பணியினை தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் ஓட்டுநர் பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏற்கனவே சுய உதவிக்குழுவில் தற்காலிகமாக பணிபுரிந்து வரும் ஓட்டுநர்கள் 44 நபர்களின் அனுமதி 31.03.2026 முடிவதால் 01.04.2026 முதல் 30.06.2026 முடிய 3 மாதகாலத்திற்கு (90 நாட்களுக்கு) நீட்டித்துக்கொள்ளவும், பார்வையில் காணும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.5816/2024/(எ-2) நாள்.10.07.2024ன் படி தரப்படுத்ததப்பட்ட ஊதியவிகிதப்படி பணிபுரியும் நாட்களுக்கு

ஊதியம் நாளொன்றுக்கு ரூ.792/- வீதம் ஊதியம் வழங்கவும், அதற்காகும் செலவினம் ரூ. 36,45,972/-. ஆகிறது.

| வ.எண். | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்கவேண்டிய தினக்கூலி விபரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | ஓட்டுநர் (DRIVERS) | 44 | 90X44X792 = 31,36,320/- (Employer COntribution) (12%+1%) 13% = 4,07,722/- ESI(3.25)= 1,01,930/- | 36,45,972/- |

ஆகவே 01.04.2026 முதல் 30.06.2026 முடிய 90 நாட்களுக்கான ஊதியமாக ரூ.36,45,972/- கூடுதல் செலவினம் மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. மூன்று மாதமோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் தொடங்கும் நாள் இவற்றில் எது முன்னரோ அதுவரை அனுமதிக்கலாம்

**கோப்பு எண்.எச்1/0112/2024(ம-3)**

## 135.) அனுமதிக்கப்பட்டது

**18.) பொருள் :** பொதுசுகாதாரம் – ஈரோடு மாநகராட்சி – மண்டலம்-4 – சுயஉதவிக்குழு தூய்மை பணியாளர்கள் – ஏப்ரல் 2026 முதல் ஜூன் 2026 முடிய மூன்று மாத காலத்திற்கு ஊதியம் வழங்க மாமன்ற ஒப்புதல் பெறுவது – தொடர்பாக.

**பார்வை**: 1. மாமன்றத்தீர்மான எண்.232, நாள்.27.06.2025.

2. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.5816/2024/ஏ2, நாள்.10.07.2024.

3. ஈரோடு மாநகராட்சி மாமன்ற சிறப்பு தீர்மான எண்.1, நாள்.30.04.2025.

4. நகர் நல அலுவலர் அவர்களின் நேரடி அறிவுரை.

.....

ஈரோடு மாநகராட்சி, மண்டலம் – 4ல் உள்ள 15 வார்டுகளில் சுமார் 39873 குடியிருப்புகள் உள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 40 மெ.டன் திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கம் ஏற்பட்டு பொது சுகாதார சீர்கேடு ஏற்படாமல், மேலும் நோய்த் தொற்று ஏற்படாமல் இருக்க வேண்டிய அவசியத்தை கருதியும் முறையாக தினசரி அப்புறப்படுத்தப்பட வேண்டும். ஆனால், இப்பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லை. ஆகையால், திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தை கருதி தற்போது செயல்பாட்டில் உள்ள தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வந்தது. திடக்கழிவு மேலாண்மை பணியை (SWM) தொடர்ந்து மேற்கொள்ள சுய உதவிக்குழு பணியாளர்கள் 239 நபர்களை கொண்டு ஜனவரி-2026 முதல் மார்ச்-2026 முடிய மூன்று மாத காலத்திற்கு நீட்டித்து வைத்துக்கொள்ள பார்வை 1ல் காணும் மாமன்றத்தின் தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்காணும் அனுமதிக்காலம் மார்ச் -2026 உடன் முடிவடையவுள்ளதால், பொதுசுகாதார பணியின் அவசியம் கருதி ஏப்ரல் 2026 முதல் ஜூன் 2026 முடிய மூன்று மாத காலத்திற்கு மேற்காணும் சுய உதவிக்குழு மூலம் 239 தூய்மை பணியாளர்களை பெற்று பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பார்வை -2ல் காணும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.5816/2024/ஏ2, நாள் 10.07.2024இல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி தினக்கூலித் தொகையாக தூய்மை பணியாளர்களுக்கு ரூ.754/-ம், ஓட்டுநர்களுக்கு

ரூ.792/-ம் ஜூன் -2025 மாதம் முதல் வழங்க மாமன்றம் சிறப்புத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதை தொடர்ந்து, பார்வை 4ல் காணும் ஆணையாளர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, ஜூன்-2025 மாதத்திற்கு உயர்த்தப்பட்ட தினக்கூலித்தொகை ரூ.754/- வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கும், பொதுசுகாதார பணியின் அவசியம் கருதி, சுய உதவிக்குழுக்கள் மூலம் தூய்மை பணியாளர்கள் 239 நபர்களை பெற்று ஏப்ரல் 2026 முதல் ஜூன் 2026 முடிய மூன்று மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் பட்டியலில் கணக்கிட்டுள்ளவாறு ரூ.1,79,57,730/-ஐ மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| சுய உதவிக்குழு பணியாளர் பணி விபரம் (SWM) | பணியாளர்-களின் எண்ணிக்கை | தினக் கூலி ரூ. | மூன்று மாத காலம் (04/26-06/26) | மொத்தம் ரூ. | 13% E PF நிர்வாக பங்குத்தொகை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.1950/- வீதம் 239 பணியாளர்களுக்கு 3 மாதங்களுக்கு (ரூ.) | 3.25% ESI நிர்வாக பங்குத் தொகை ரூ. | மொத்த செலவினம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| தூய்மை பணியாளர்கள் | 239 | 754 | 89 | 16038334 | 1398150 | 521246 | 17957730 |

**அலுவலகக் குறிப்பு :**

1. செலவினத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மூன்று மாதங்களோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் தொடங்கும் நாள் இவற்றில் எது முன்னரோ அதுவரை அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.எச்.1/1894.2020 (ம-4)

## 136.) அனுமதிக்கப்பட்டது

**19.) பொருள் :** பொதுசுகாதாரம் – ஈரோடு மாநகராட்சி – மண்டலம்-4 – சுயஉதவிக்குழு ஓட்டுநர்கள் – ஏப்ரல் 2026 முதல் ஜூன் 2026 முடிய மூன்று மாத காலத்திற்கு ஊதியம் வழங்க மாமன்ற ஒப்புதல் பெறுவது – தொடர்பாக.

பார்வை :

1. மாமன்றத்தீர்மான எண்.236, நாள். 27.06..2025.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.5816/2024/ஏ2, நாள்.10.07.2024.
3. ஈரோடு மாநகராட்சி மாமன்ற சிறப்பு தீர்மான எண்.1, நாள்.30.04.2025.
4. ஆணையாளர்(பொ) அவர்களின் குறிப்பு ந.க.எண்.எச்1/1765/2025 நாள்.09.05.2025.
5. நகர் நல அலுவலர் அவர்களின் நேரடி அறிவுரை

*******

ஈரோடு மாநகராட்சி, மண்டலம் – 4ல் உள்ள 15 வார்டுகளில் சுமார் 39873 குடியிருப்புகள் உள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 40 மெ.டன். திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இவ்வாறு உருவாகும் திடக்கழிவுகள் தேக்கம் ஏற்பட்டு, பொது சுகாதார சீர்கேடு ஏற்படாமல், மேலும் நோய்த்தொற்று ஏற்படும் அவசியத்தை கருதியும், முறையாக தினசரி அப்புறப்படுத்தப்பட வேண்டும். இப்பணிகளை மேற்கொள்வதற்கு 6 (HCV) கனரக வாகனங்களும், 36 இலகு வகை (LCV) வாகனங்களும், டிராக்டர் 4, ஜெட்ராடு வாகனம் 1, கழிவு நீர் அகற்றும் வாகனம் 1 மொத்தம் 48 வாகனங்கள் உள்ளது. நிரந்தர ஓட்டுநர்கள் மொத்தம் 4 பேர் மட்டும் உள்ளனர். மேலும், இரவுப்பணிக்கென 5 ஓட்டுநர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணி வாகனங்களுக்கு 49 ஓட்டுநர்களும் சேர்த்து 54 ஓட்டுநர்கள் தேவைப்படுகிறது. நிரந்தர ஓட்டுநர்கள் 4 பேர் தவிர்த்து, மீதம் 50 ஓட்டுநர்கள் தேவைப்படுவதால், ஏற்கனவே பணிபுரிந்து வரும் தற்காலிக சுய உதவிக்குழு ஓட்டுநர்கள் 45 நபர்களை கொண்டு ஜனவரி-2026 முதல் மார்ச்-2026 முடிய மூன்று மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ள பார்வை-1-ல் காணும் மாமன்றத்தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்காணும் அனுமதிக்காலம் மார்ச்-2026 உடன் முடிவடையவுள்ளதால், பொதுசுகாதார பணியின் அவசியம் கருதி ஏப்ரல் 2026 முதல் ஜூன் 2026 முடிய மூன்று

மாத காலத்திற்கு மேற்காணும் சுய உதவிக்குழு மூலம் 45 ஓட்டுநர்களை பெற்று பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பார்வை-1ல் காணும் ஈரோடு மாவட்டஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.5816/2024/ஏ2, நாள் 10.07.2024 இல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி தினக்கூலித் தொகையாக தூய்மை பணியாளர்களுக்கு ரூ.754/-ம், ஓட்டுநர்களுக்கு ரூ.792/-ம், ஜூன் -2025 மாதம் முதல் வழங்க சிறப்புத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதை தொடர்ந்து, பார்வை 4ல் காணும் ஆணையாளர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, பொதுசுகாதார பணியின் அவசியம் கருதி, சுய உதவிக்குழுக்கள் மூலம் ஓட்டுநர்கள் 45 நபர்களை பெற்று ஏப்ரல் 2026 முதல் ஜூன் 2026 முடிய மூன்று மாதங்களுக்கு மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் கீழ்க்காணும் பட்டியலில் கணக்கிட்டுள்ளவாறு ரூ.35,38,299/-ஐ மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| சுய உதவிக்குழு பணியாளர் பணி விபரம் | பணியாளர்-களின் எண்ணிக்கை | தினக்கூலி ரூ. | மூன்று மாத காலம் (04/26-06/26) | மொத்தம் ரூ. | 13% E PF நிர்வாக பங்குத்தொகை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.1950/- வீதம் 45 பணியாளர்களுக்கு 3 மாதங்களுக்கு (ரூ.) | 3.25% ESI நிர்வாக பங்குத் தொகை ரூ. | மொத்த செலவினம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| ஓட்டுநர் | 45 | 792 | 89 | 3171960 | 263250 | 103089 | 3538299 |

**அலுவலகக் குறிப்பு :**

1. செலவினத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மூன்று மாதங்களோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் தொடங்கும் நாள் இவற்றில் எது முன்னரோ அதுவரை அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.எச்.1/1488/2023 (ம-4)

## 137.) அனுமதிக்கப்பட்டது

**20.)** ஈரோடு மாநகராட்சி மண்டலம் – 4 வார்டு எண். 42 மற்றும் 43 ல் உள்ள நச்சினார்கிணியார் வீதி மற்றும் அக்ரஹார வீதியில் உள்ள பாதாள சாக்கடை பிரதான

இணைப்புக்குழாய் பழுதடைந்துள்ளது. இதனால் அப்பகுதியில் கழிவுநீர் சாலையில் வெளியேறி தேங்கி நின்று பொது சுகாதாக்கேடு ஏற்பட்டது. எனவே மேற்கண்ட பகுதியில் பழுதடைந்துள்ள பாதாள சாக்கடை குழாய் மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த சட்டம் 2022 தமிழ்நாடு சட்டம் 35/2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57 (7) வது பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். THAYI INFRA PROJECTS SOLUTIONS, ஒப்பந்ததாரர் ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.79426/- ஐ, திருவாளர். THAYI INFRA PROJECTS SOLUTIONS, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**கோப்பு எண். இ1/3711/2025-11 (ம-4)**

## 138.) பதிவு செய்யப்பட்டது.

